Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 8, 2023

புதன்கிழமை நவம்பர் 08, 2023 | ஒளி: 09 கதிர்: 123 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## அரிசி மாயம் ஐவர் இடைநீக்கம்



அரிசி சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான நான்கு களஞ்சியசாலைகளில் அரிசி கையிருப்பு காணாமல் போனமை தொடர்பில் ஐந்து களஞ்சியசாலை உத்தியோகத்தர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொல்கஹவெல, ஆனமடுவ, நிகவெரட்டிய மற்றும் மஹவ ஆகிய நான்கு நெல் களஞ்சியசாலைகளில் 9 இலட்சத்து 75ஆயிரத்து ஐம்பது கிலோகிராம் நெல் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நெல் இருப்பின் மொத்த பெறுமதி 100 மில்லியன் ரூபாயாகும்.

தொடர்ச்சி P2

## “வேலியிட்டது தோட்டக்காரன்”



இடைக்கால கிரிக்கட் குழுவை நீக்குமாறு கோரிய ஜனாதிபதி, அவ்வாறு செய்யாவிட்டில், விளையாட்டுச் சட்டத்தை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வேன் என ஜனாதிபதி தன்னிடம் தெரிவித்ததாக விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (7) தெரிவித்தார்.

தன்னை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு தனங்களுக்கு விருப்பமான தீர்மானத்தை எடுக்குமாறு தான் கூறியதாக தெரிவித்த அமைச்சர், நியமிக்கப்பட்ட குழுவை ரத்து செய்யப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

’வேலியிட்டது தோட்டக்காரன் என்றால் இந்தப் பிரச்சனையை யாரிடம் சொல்ல முடியும்’ என்ற பழமொழி இந்த நேரத்தில் நினைவுக்கு வருவதாகவும் ரொஷான் ரணசிங்க கூறினார்.

## அர்ஜுன குழுவுக்கு இடைக்கால தடை



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில், விளையாட்டு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் செயற்பாட்டை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை, செவ்வாய்க்கிழமை (07) பிறப்பித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் ஷம்மி சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவிற்கு அமைய மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவு 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும்.

தொடர்ச்சி P2

## ATB க்கு எதிரான மனுக்கள் தள்ளுபடி



பயங்கரவாத தடுப்பு சட்டமூலத்துக்கு Anti-Terrorism Bill. (ATB) எதிராக தாக்கல் செய்யப்பட்ட 10 மனுக்களையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில், செவ்வாய்க்கிழமை (07) காலை 9.30க்கு கூடியது.

பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்து சபாநாயகர் அறிவிப்பின் போதே, மேற்படி மனுக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ரணில் இன்று விசேட உரை



தேர்தல் முறை திருத்தம் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாக கொண்டு விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமையும் பட்சத்தில் எதிர்வரும் முதலாவது தேசிய தேர்தலை புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்த முடியுமா என்பதை கண்டறியுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உரிய திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையில் ஜனாதிபதி இந்த ஆணைக்குழுவை நியமித்ததுடன், சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

அத்துடன், தேர்தல் முறை திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதன்கிழமை (8) பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை வெளியிட உள்ளார்.

புதிய முறைமை தொடர்பான வரைபை ஆறு மாத குறுகிய காலத்திற்குள் தயாரிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## “மூவர் குறித்தும் முடிவுக்கு வரவில்லை”

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய் பெரேரா மற்றும் ரோஹன பண்டார ஆகியோர் தொடர்பில் எவ்விதமான முடிவுக்கும் வரவில்லையென பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், கயந்த கருணாதிலக்க ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



தொடர்ச்சி P2

## மாதவனையில் சோதனை சாவடி



■ எம் எஸ் எம் நூர்தீன்

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை மேய்ச்சற்தரை பகுதியில் பொலிஸ் சோதனைசாவடியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பொலிஸ் சோதனைசாவடியை மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஞாயிற்றுக்கிழமை (05) திறந்து வைத்து கடமைகளை ஆரம்பித்தது வைத்தார்.

தொடர்ச்சி P2

## ஆசிரியை தாக்கியதில் மாணவன் படுகாயம்



■ எஸ்.சதீஸ்

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில், நான்காம் தரத்தில் கல்விப் பயிலும் ஒன்பது வயதான மாணவன் ஒருவனை, ஆசிரியை ஒருவர் தடியால் கடுமையாக தாக்கியதால், அம்மாணவன் கடும் காயமடைந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவன், பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை (06) ஆங்கில பாடம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, இரு மாணவர்கள் கதைத்துக்கொண்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

## இடைக்கால குழுவை ஆராய குழு நியமிக்கப்படவில்லை

விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக்கெட் இடைக்கால குழுவை நியமித்தமை சரியா அல்லது தவறா என்பதை ஆராய அமைச்சரவையில் எந்த குழுவும் நியமிக்கப்படவில்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் நிர்வாக சபை கலைக்கப்பட்டதற்கு மக்கள் ஆதரவு இருப்பதை தான் ஒப்புக்கொள்கிறேன் என்றும் அமைச்சர் கூறினார்.



தொடர்ச்சி P2

## “திரட்டாத திருடர்களை அம்பலப்படுத்தவும்”



உள்நாட்டு மது உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மது உற்பத்தி மூலம் அரசாங்கத்திற்கு அதிக வரி வருமானம் கிடைக்க வேண்டும் என்றாலும்,மதுபான உற்பத்தி நிறுவனங்கள் மேற்கொள்ளும் பல்வேறு மோசடித் திட்டங்களால், அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய உரிய வரி வருமானம் கிடைக்காமல் போயுள்ளதாகவும்,இது குறித்து உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடுகள் தெரிவித்தும் இதுவரை

தொடர்ச்சி P2

## உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு



நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் அல்லது அதன் விதிகள் இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணானவை அல்ல என்றும், சில ஷரத்துக்களில் குழுநிலையில் திருத்தங்களை மேற்கொண்டால் எளிய பெரும்பான்மை மூலமாக நிறைவேற்ற முடியுமென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. பாராளுமன்றம், பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில், செவ்வாய்க்கிழமை (07) காலை 9.30க்கு கூடியது.

பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்து சபாநாயகர் அறிவிப்பின் போதே, மேற்படி சட்டமூலம் தொடர்பில், உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## “இந்திய – சீனா பலப்பரீட்சையில் தமிழினத்தின் வாழ்வும் அழிகிறது”



### துளசி குற்றச்சாட்டு: சீனாவின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தினார்

ஈழத்தமிழினத்தின் வாழ்வும் வளமும்மிக்க பாக்கு நீரிணை இந்தியா மற்றும் சீனாவின் பலப்பரீட்சைக் களமாக மாறுமாயின் முதலில் அழிவது ஈழத்தமிழர்கள்தான். நாங்கள் அதனை ஒருபோதும் கைகட்டி வேடிக்கை பார்க்க போவதில்லை என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டையை 99 வருட ஒப்பந்த அடிப்படையில் கையகப்படுத்திய சீனா, இந்து சமுத்திர அதிகாரப்போட்டியின் மையப்புள்ளியாகும் பாக்கு நீரிணையும் தமிழர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்து, தமிழர்கள் நலன்சார்ந்து செயற்படும் என நினைப்பது சிறுபிள்ளைத்தனமானது என்றார்.

தொடர்ச்சி P2

# அர்ஜுன குழுவுக்கு இடைக்கால தடை

புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் இடைக்காலக் குழுவின் தலைவராக 1996 உலகக் கிண்ணத்தை வென்ற அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க திங்கட்கிழமை (06) நியமிக்கப்பட்டார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் 1973ஆம் ஆண்டு 25ஆம் இலக்க விளையாட்டு சட்டத்தின் ஊடாக அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ஏழு பேர் கொண்ட இடைக்கால குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால குழு, திங்கட்கிழமை (06) முதல் செயல்படுமென அறிவிக்கப்பட்டது.

மேலும், ஷம்மி சில்வா தலைமையிலான இலங்கை கிரிக்கெட் சபை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக விளையாட்டுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அர்ஜுன ரணதுங்கவுக்கு மேலதிகமாக, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.ஐ.இமாம், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ரோஹினி மாரசிங்க, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஐராங்கனி பெரேரா, உபாலி தர்மதாச, ரகித ராஜபக்ஷ மற்றும் ஹிஷாம் ஜமால்டீன் ஆகியோர் இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கை கிரிக்கட் துறை எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைகளுக்குத் தீர்வு காண விசேட அமைச்சரவை உப குழுவொன்று திங்கட்கிழமை (06) கூடிய அமைச்சரவை கூட்டத்தின் அனுமதியுடன் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த உப குழுவின் தலைவராக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் அதன் உறுப்பினர்களாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார ஆகியோர் அடங்குகின்றனர்.



# ATB க்கு எதிரான மனுக்கள் தள்ளுபடி

சட்டமூலம் இன்னும் ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படாததால் அதனை ஆராய முடியாது என உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, சபைக்கு அறிவித்தார்.

அதன்பிரகாரம், அந்த சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பத்து மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

# அரிசி மாயம் ஐவர் இடைநீக்கம்

இந்த திருட்டு 2021-22ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றுள்ளதுடன், விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் சட்டத்தரணி புத்திக இத்தமல்கொடவிற்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

விசாரணை அறிக்கை செவ்வாய்க்கிழமை (7) விவசாய அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. விசாரணையில் கண்டறியப்பட்டதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நெல் கையிருப்பு இடமாற்றம் தொடர்பில் மேலும் மூன்று விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் உள்ளக கணக்காய்வு விசாரணை, முதற்கட்ட விசாரணை மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக வேறு சிலரும் இந்த திருட்டில் ஈடுபட்டுள்ளார்களா என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரிசி சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான கையிருப்புகள் நாடளாவிய ரீதியில் உள்ள ஏனைய களஞ்சியசாலைகளில் உள்ளதா என்பதை ஆராயுமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, அரிசி சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் சட்டத்தரணி புத்திக இட்டமல்கொடவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# இடைக்கால குழுவை ஆராய குழு நியமிக்கப்படவில்லை

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் செவ்வாய்க்கிழமை (07) கூடியது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கருத்துக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு நடந்த உரையாடல் பின்வருமாறு:

முன்னதாக உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நானும் ஒரு கிரிக்கட் வீரர்தான். கிரிக்கெட் மீது எங்களுக்கு அலாதி பிரியம். இதனை ஜனாதிபதியும் விளையாட்டுத்துறை அமைச்சரும் நாட்டுக்கு கூற வேண்டும். எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள் 225 பேரும் ஒன்றிணைந்து ஒரு நிலைப்பாட்டுக்கு அமைவாக கிரிக்கட்டை முன் கொண்டு செல்வதற்காக இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவோம். முதலாவதாக கிரிக்கெட்டுக்குள் அரசியல் இல்லாது செய்யப்பட வேண்டும் என்றார்.

இதனிடையே, எழுந்த ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கிரிக்கெட் நிர்வாக சபை கலைக்கப்படுவதற்கு மக்கள் ஆதரவு இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழு உறுப்பினர்களைப் பற்றி நாங்கள் பேசவில்லை. இது குறித்து அமைச்சரவை கூட்டத்திலும் உரையாடப்பட்டது. இது குறித்து ஜனாதிபதியும் அமைச்சரும் கலந்து பேசி முடிவெடுப்பார்கள் என்றார்.

மற்றபடி அமைச்சர் எடுத்த முடிவு சரியா தவறா என்பதை கண்டறிய எந்த குழுவும் நியமிக்கப்படவில்லை என்றார்.

# உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு

சில ஷரத்துக்களை குழுநிலையில் திருத்தங்களைத் தொடர்ந்து சட்டமூலத்தை விசேட பெரும்பான்மையால் நிறைவேற்ற முடியும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# ஆசிரியை தாக்கியதில் மாணவன் படுகாயம்

அப்போதே மேற்படி மாணவன் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தாக்குதலுக்கு உள்ளான மாணவனின் வலது கை மற்றும் உடம்பின் பின் பகுதியில் பிரம்பால் அடித்தமைக்கான அடையாளங்கள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில், கல்வி அமைச்சு, மத்திய மாகாண ஆளுநர், மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளர், ஹட்டன் வலய கல்வி பணிமனைக்கு சிறுவனின் பெற்றோரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# “திரட்டாத திருடர்களை அம்பலப்படுத்தவும்”

உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்,எனவே இலங்கை மதுவரித் திணைக்கள உயர் அதிகாரிகள் குறித்து ஆராய்ந்து,நாட்டுக்கு வரி வருமானத்தை திரட்டாதுள்ள திருடர்கள் யார் என்பதை வெளிப்படுத்துங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

பொருளாதாரத்தை பலப்படுத்துகிறோம் என்ற பெயரில் நாட்டு மக்கள் மீது நேரடி மற்றும் மறைமுக வரிகளை அரசாங்கம் சுமத்தி வரும் வேளையில், இதுபோன்ற சம்பவங்களை கண்டுகொள்ளாமல், வரி செலுத்தும் சாதாரண மக்கள் மீது அதிக வரிச்சுமையை சுமத்தி அவர்களை மேலும் ஒடுக்கும் செயற்பாட்டையே அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும், பெறுமதி சேர் வரி அதிகரிப்பு, 3ஆவது தடவையாகவும் சட்ட விரோதமாக மின் கட்டணம் அதிகரிப்பைச் செய்வது போலவே மது வரித் துறையில் முறைகேடுகள் மூலம் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படும் வரிப்பணம் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கைவிடுத்தார்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக மக்களிடம் வரி விதிக்கப்பட்ட போதும், மதுபான நிறுவனங்களுக்கு சட்டவிரோத சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதால் 50 பில்லியனுக்கும் அதிகமான வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சஜித் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தன்னிச்சையான வரிக் கொள்கை தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ், செவ்வாய்க்கிழமை (07) கேள்வி எழுப்பிய போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்கு வரி செலுத்தப்பட்டதாக சான்றளிக்கும் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு 2019 இல் சட்டம் கொண்டு வரப்பட்டாலும், மெண்டிஸ் நிறுவனம் 200 மி.லீ. கொள்ளவு கொண்ட 100,000 போத்தல்களில் இந்த ஸ்டிக்கர் மோசடியை மேற்கொண்டு 300 இலட்சம் இழப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், இவர்களுக்கு எதிராக என்ன சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கேள்வி எழுப்புவதாகவும் சஜித் தெரிவித்தார்.

2023 ஜனவரி 18ஆம் திகதி அன்று கூட போலி ஸ்டிக்கர்கள் குறித்து பல்வேறு குழுக்கள் மதுவரி திணைக்கள ஆணையாளருக்கு முறைப்பாடாக தெரிவித்தாலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில் பியர் கடைகளுக்கான உரிமப் பத்திரம் வழங்கப்பட்டாலும், சுற்றுலா இல்லாத பகுதிகளில் உள்ள விகாரைகளுக்கு அருகில் கூட பியர் கடைகளை நிறுவுவதற்கான உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், சிலர் நாட்டின் சட்டத்தை மீறி இவ்வாறான 2க்கும் மேற்பட்ட உரிம பத்திரங்களை பெற்றுள்ளதாகவும் சஜித் தெரிவித்தார்.

அத்துடன், தொழில் வல்லுநர்களுக்கு அரசாங்கம் அதிக வரி விதித்தாலும், மதுபான நிறுவனங்களுக்கு வரி விதிக்கத் தயங்குகிறது என்றும் வரி செலுத்துவதை தவிர்ப்பவர்கள், மோசடி செய்பவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் பயப்படுவதாகவும், இழந்த வரிகளை அறவிட நிவாரண ரீதியிலான ஏற்பாட்டை செயல்படுத்தக் கூடாது என்றும் இது ஒரு மோசடி என்றும் வரி செலுத்தாத மதுபான நிறுவனங்கள் மீது உடனடியாக வரிப்பணம் அறவிடப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நட்பு வட்டார நண்பர்கள் ஒன்று கூடி சீனி வரி மோசடியிலும் ஈடுபட்டுள்ளனர் என்றும்,சீனி வரி மோசடியால் ஏற்பட்டுள்ள 100 கோடி ரூபாய் வரி வருமான இழப்பு குறித்த விவரம் சபைக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் இந்த அரசாங்கம் வெற்றிபெற குறித்த மது நிறுவனங்கள் வழங்கிய ஆதரவின் காரணமாகவே இந்த நிமிடம் வரை இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் நட்பு வட்டார நண்பர்களின் கூட்டுச் சதி இங்கு நடந்துள்ளதாகவும் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

# “மூவர் குறித்தும் முடிவுக்கு வரவில்லை”

மூவரும் பாராளுமன்ற வளாகத்தில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய நாங்களும் அங்கம் வகிக்கும் வகையில் உங்களால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட மூவரும் பாராளுமன்றத்தின் கௌரவத்திற்கு களங்கம் விளைவித்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது என குழு தகவல் வெளியிட்டுள்ளதாக அச்சு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் பொய்யான செய்தியொன்று வெளியாகியுள்ளது.

இந்தக் குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில், இந்தக் குழு அப்படியொரு முடிவுக்கு வரவில்லை என்பதையும், விசாரணைக் குழுவின் பணிகள் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதையும் நாங்கள் உங்களுக்கு குறிப்பாகக் கூறுகிறோம்.

இதன் பிரகாரம், இந்த ஊடகங்களில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை திருத்துவதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

# மாதவனையில் சோதனை சாவடி

இந்த மேய்ச்சற்தரை பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் பண்ணையாளர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய மேற்படி சோதனைசாவடி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் பிரிவாக இந்த புதிய பொலிஸ் சோதனை சாவடி நிலையம் செயற்படும்.

# 42 குடும்பங்கள் வெளியேற்றம்

மண்சரிவு அபாயம் காரணமாக பதுளை மாவட்டத்தின் பெரகல, பத்கொட பகுதியில் இருந்து 42 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்ற மண்சரிவில் 2 வீடுகள் சேதமடைந்துள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் பிரபாத் அபேரத்ன தெரிவித்தார்.

# “இந்திய – சீனா பலப்பரீட்சையில் ...

சீனா போன்ற ஒரு பெரிய தேசம் வடக்கில் மீன்பிடிக்க வரவில்லை. தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்து தமிழர்களை இடம்பெயரச்செய்து பாக்கு நீரிணையை தம்வசப்படுத்தி தமிழர் தேசத்தை தமது பிராந்தியமாக்கி அதனூடாக முழு இலங்கையையும், பாக்கு நீரிணையின் மறுபக்கமான தமிழகத்தையும் கேரளாவையும் தமது கட்டுப்பாட்டுப் பிராந்தியமாக்குவதே அவர்களது பிரதான இலக்காகும் என்றார்.

அதன் ஆரம்பக் கட்டம்தான் வடகடல் எங்கினும் மக்கள் தமது ஜீவனோபாயமாக சிறுகடல் தொழில் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களை அவர்களிடம் இருந்து பறித்து, கடலட்டை வளர்ப்பு பண்ணைகளாக மாற்றியிருக்கிறார்கள். கடலட்டை வளர்க்கும் கடற்பிரதேசங்கள் தமது இயற்கை சமநிலை தன்மையினை இழந்து வருகின்றன என்றார்.

அந்த பண்ணைகளில் பாவிக்கப்படும் உயர் தன்மையுடைய வெளிச்சங்களால் மீன்களின் கருக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சீனாவின் நில ஆக்கிரமிப்புக்கான நகர்வுகளை எமது மக்களின் இருப்பு அவர்களின் பொருளாதாரம் எதிர்காலம் கருதி அவர்களது வருகையை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

திருகோணமலையையும் பாக்கு நீரிணையும் யார் கையில் வைத்திருக்கிறார்களோ அவர்களால்தான் ஆசியாவையும் இந்துமா சமுத்திரத்தையும் கையாள முடியும். இதன் நிமித்தமே போர்த்துகீசர், டச்சுகாரரர் ஆங்கிலேயர்கள் வந்தார்கள் வென்றார்கள் ஆண்டார்கள் சென்றார்கள். ஆனால், சீனாவின் நகர்வு வெற்றிபெறுமானால் ஒருபோதும் பாக்கு நீரிணையை விட்டுச் செல்லமாட்டார்கள். இந்துமா கடல் சீனமயமாகும் என்றார்.

இந்தியா ஒரு மெத்தன போக்கோடு இலங்கையை எப்போதும் கையாளலாம் என எண்ணுகின்றது.

அதன் வெளிப்பாடுதான் அண்மைய இந்திய வெளியுறவு அமைச்சர் மற்றும் இந்திய நிதி அமைச்சர்களின் வருகையின்போதும் தமிழ்த்தலைமைகள் புறக்கணிக்கப்பட்டமையாகும். பிரதமரைச் சந்திக்கக் கடிதம் அனுப்பப்பட்டும் அவை கிடப்பில் போடப்பட்டுள்ளமை. இந்துமா சமுத்திரத்தின் பலமான பாக்கு நீரிணையின் இரு கரைகளிலும் ஈழத்தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் கேரளமும் தங்கியுள்ளமையே இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு உத்தரவாதமாகும்.

ஈழத்தமிழினத்தின் வாழ்வும் வளமும் மிக்க பாக்கு நீரிணையில் இந்திய சீன பலப்பரீட்சை களமாக மாறுமாயின் முதலில் அழிவது ஈழத்தமிழர்கள்தான் அதனை ஒருபோதும் கைகட்டி வேடிக்கை பார்க்க போவதில்லை என்பதனை வலுவாகப் பதிவு செய்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

# இளைஞனின் சடலம் மீட்பு



அவிசாவளை- ஹுலத்துவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து 22 வயதான இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அவிசாவளை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைய திங்கட்கிழமை (06) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இளைஞன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணம் தொடர்பில் நீதவான் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சடலம் பிரேத பரிசோதனைக்காக அவிசாவளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அவிசாவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கரையொதுங்கிய கஞ்சா பொதிகள் மீட்பு

சண்முகம் தவசீலன்

புதுமாத்தளன் கடற்கரையில் கஞ்சா பொதிகளை கைப்பற்றிய முல்லைத்தீவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புதுமாத்தளன் கடற்கரையில் பொதிகள் காணப்படுவதாக செவ்வாய்க்கிழமை (07) இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து, கடற்கரைக்குச் சென்ற இராணுவத்தினர் கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக இராணுவத்தினரால் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார், குறித்த கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கி கிடந்த தலா 22 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா பொதிகளை கைப்பற்றியுள்ளனர்.

இதுவரை 11 கஞ்சா பொதிகள் கைப்பற்றிய நிலையில், கடற்கரை பகுதி முழுவதும் மேலும் பொதிகள் ஒதுங்கியுள்ளதா என்று சோதனை செய்யப்பட்டுள்ளதுடன், மீனவர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில், விசாரணைகளின் பின்னர் கஞ்சா பொதிகளை நீதிமன்றத்தில் பாராப்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நீர் தொட்டியில் விழுந்து குழந்தை பலி

சுமணசிறி குணதிலக்க



மொனராகலை - குமாரவத்த பகுதியில் 01 வயது 11 மாதங்களேயான குழந்தை தண்ணீர் தொட்டியில் விழுந்து உயிரிழந்த சம்பவமொன்று திங்கட்கிழமை (06) பதிவாகியுள்ளது.

தனது வீட்டின் பக்கத்திலுள்ள குழந்தைகளுடன் விளையாடி கொண்டிருந்த குழந்தை, வெகு நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில், தாயார் தேடிய போதே குழந்தை தண்ணீர் தொட்டியில் விழுந்ததை கண்டு மீட்டுள்ளார்.

குழந்தையை மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு தூக்கிச் சென்றபோது குழந்தை ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்

அம்பாறை மாயாதுன்ன பிரதேசத்தில் திங்கட்கிழமை (06) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 42 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் பின்புறம் குளித்துக் கொண்டிருந்தபோது, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீதவான் விசாரணையைத் தொடர்ந்து பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

குற்றவாளி அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரைப் பிடிக்க பண்டாரதுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





# காணிகளை நிரப்பிய இருவர் கைது

தலவத்துகொட - கலல்கொட பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் காணிகளை நிரப்பிய இருவர் திங்கட்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலல்கொட பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் காணி சுவீகரிப்பு இடம்பெறுவதாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் டிப்பர் இயந்திரம் மற்றும் மண் அகழ்வு இயந்திரம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேக நபர்கள் மற்றும் தொடர்புடைய வாகனங்கள் மேலதிக விசாரணைகளுக்காக தலங்கம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# டெங்கு அபாயம்




எம்.எஸ்.எம். ஹனீபா

சம்மாந்துறை பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய வெற்றுக்காணிகளை வைத்திருப்போர் ஒரு வார காலத்திற்குள் காணிகளை துப்பரவு செய்யுமாறு, சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர். எஸ்.ஐ.எம். கபீர் செவ்வாய்க்கிழமை (07) தெரிவித்துள்ளார்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் பருவமழை பெய்து வருவதனால் பொதுமக்கள் விழிப்புடன் செயல்படுமாறும், பாடசாலைகள், மதஸ்தலங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் சிரமதான பணிகளை முன்னெடுக்குமாறும் அறிவித்துள்ளார் .

டெங்கு நுளம்பு பரவாமல் தடுக்க பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கொழிப்பு செயலணி மற்றும் பொலிஸார் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக விழிப்பூட்டல், துண்டுப்பிரசுரம் மூலம் மற்றும் ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்கள் துப்பரவு செய்யுமாறும் அதனை மீறுபவர்களுக்கு எதிராக நீதிமன்றின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆடை லொறி அப்படியே புரண்டது



சுதத் ஹேவா

குருநாகலில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த லொறி ஒன்று, வட்டவளை பாடசாலைக்கு அருகில் வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகிய சம்பவமொன்று செவ்வாய்க்கிழமை (07) பதிவாகியுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆடை விற்பனைக்காக ஹட்டன் நோக்கி பயணித்த லொறியே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், விபத்தில் காயமடைந்த சாரதி வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வீதியை மறைத்து வீதிக்காக போராட்டம்



நவி

கலஹா - தெல்தோட்டையில் பிரதேசத்தில் இருந்து ஹேவாஹேட்ட வரையான வீதி மிகவும் பழுதடைந்து காணப்படுவதை கண்டித்து பிரதேசவாசிகள் மற்றும் பஸ் சாரதிகள் ஒன்றிணைந்து நூல்கந்துர பிரதேசத்தின் நாராஹின்னவிற்கு அருகில் வீதியை மறைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தெல்தோட்டையில் இருந்து ஹேவாஹேட்ட வரையான 18 கிலோமீற்றர் தூரமும், நூல்கந்துரவில் இருந்து 8 கிலோமீற்றர் தூரமும் மிகவும் பழுதுயடைந்துள்ளதாகவும், மக்கள் நடக்கக்கூட முடியாதளவுக்கு நீர் நிரம்பியுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் அரசியல்வாதிகளும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளும் வீதியை இடித்து அகற்றுவதற்காக வந்த பின்னர் இன்று வரை வரவில்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன், போராட்டக்காரர்களால்

வீதியின் குறுக்கே பெரிய மரங்கள் மற்றும் கற்களை வைத்து வீதியை மறைத்துள்ளனர்.

இவ்வீதியில் சுமார் 10 தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுவதாகவும், வீதியின் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் அவற்றை முறையாக இயக்க முடியாதுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# நீர்மட்டம் அதிகரிப்பதால் எச்சரிக்கை

அஸ்ஹர் இப்றாஹிம்

கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தற்போது அதிக மழை வீழ்ச்சி கிடைத்து வருகின்றதால் மாகாணத்திலுள்ள நீர் நிலைகளின் நீர்வரத்து உயர்ந்து வருகின்றது.

எனவே, பொது மக்கள் நீரேந்து பிரதேசங்களில் மிக அவதானமாக முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டு, வேண்டத்தகாத உயிரிழப்புகள் மற்றும் ஏனைய அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறவேண்டும் என அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் கிழக்கு மாகாணத்திற்கு வெளி மாகாணங்களிலிருந்து வருகை தருபவர்கள் மேற்படி நீரேந்து பகுதிகளில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளுமாறும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், மாகாணத்திலுள்ள நீர் நிலைகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள், கிணறுகள் மற்றும் குட்டைகள் என்பவற்றின் நீர்வரத்து உயர்ந்து வருகின்ற நிலையில், கிழக்கில் நீராடி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் கடந்த காலங்களில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 47 கி.கி கஞ்சாவுடன் 44 வயதானவர் கைது

புகஜிந்தன்

கிளிநொச்சி பிரதேசத்தில் கஞ்சா தொகையுடன் ஒருவரை திங்கட்கிழமை (06) கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள தனியாரின் வீட்டில் கஞ்சா மறைத்து வைத்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

மேலும், பொலிஸாரால் 47 கிலோ கிராம் கஞ்சாவை மீட்டுள்ளதுடன், சந்தேசத்தின் பேரில் 44 வயதுடைய ஒருவரை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தொடந்தும் விசாரணை இடம்பெற்று வரும் நிலையில், சான்று பொருட்களையும், சந்தேக நபரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிறது

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையிலான அணி, 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டதன் பின்னரே, இலங்கை என்றொரு நாடு இருக்கிறது என்பது உலகிலுள்ள பல நாடுகளுக்கும் தெரியவந்தது என பலரும் கூறுவதை கேள்விப்பட்டிருப்போம்.

அதன்பின்னரே, இலங்கை தொடர்பிலான எதிர்மறை விம்பம் அழிக்கப்பட்டது.

எனினும், இடம்பெறும் சம்பவங்கள், இலங்கை கிரிக்கெட்டுக்கு என்ன? நடக்கிறது அணியின் நிலைமை என்ன என்பது தொடர்பில் உலக நாடுகள் பலவற்றையும் திரும்பிப் பார்க்கச் செய்துள்ளது.

இந்தியாவில் தற்போது நடைபெற்றுவரும் உலகக் கிண்ண தொடரில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நவம்பர் 2ஆம் திகதி நடந்த போட்டியில் இலங்கை அணி படுதோல்வி அடைந்ததை அடுத்தே, இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்துக்கு எதிரான குரல் வலுத்தது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

அன்றைய தின போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, துடுப்பாட்டத்தை தெரிவு செய்யாது களத்தடுப்பில் ஈடுபட்டமை ஏன்? என்ற சந்தேகத்துக்கு இன்றுமே பதிலில்லை. எனினும்,பாராளுமன்றத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ச, இதற்கெல்லாம் பின்னால் இந்தியாவே நிற்கின்றது என அப்பட்டமாக குற்றஞ்சாட்டினார்.

இதனிடையே, இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தைக் கலைத்த விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க, முன்னாள் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில், இடைக்கால குழுவொன்றை நியமித்தார். அந்த இடைக்கால குழுவைச் சவாலுக்கு உட்படுத்தி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா தாக்கல் செய்த மனுவை அடுத்து, இடைக்கால குழுவுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 14 நாட்களுக்கு அமல்படுத்தப்பட்டது.

இந்நிலையில், பங்களாதேஷுக்கும் இலங்கைக்கும் இடையில் திங்கட்கிழமை (06) இடம்பெற்ற போட்டியில், தோல்வியைத் தழுவிக்கொண்ட இலங்கை அணியினர், பங்களாதேஷ் அணியினருக்குக் கைலாகு கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் கிரிக்கெட் நிர்வாக மோதல் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், வெற்றி தோல்வியைத் தாங்கிக்கொள்ள முடியாத, அதாவது வென்ற அணியை வாழ்த்தக்கூட முடியாத அணியாகவே இலங்கை அணி இருக்கின்றது என்ற படம் வரையப்பட்டுவிட்டது.

இலங்கை அணி, தொடர்ச்சியாகத் தோல்வியைத் தழுவிக்கொள்கின்றமைக்கு விளையாடும் அத்தனை வீரர்களும் அணித்தலைவராக வரவே முற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகளை முன்னாள் வீரர்கள் முன்வைத்துள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும்.

வீரர்கள் ஒருபுறம் மோசமாக விளையாடும் நிலைமையில், இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்துக்கு உள்ளும், ஏன்? அரசாங்கத்துக்குள்ளும் இந்த கிரிக்கெட் பெரும் சர்ச்சையை கிளப்பி உள்ளது.

இது நாட்டுக்கும் கிரிக்கெட் அணிக்கும், எதிர்காலத்தில் கிரிக்கெட்டை தெரிவு செய்தவர்களுக்கும் நல்லதல்ல என்பதை நினைவூட்டுவதுடன் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே சிறந்தது என அறிவுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தனிமனித ஒழுக்கம் அற்றவன், நேர்மைக்குப் புறம்பானவன் ஆவான். ஆனால், இவர்களே நடிப்புடன் கூடிய வாழ்வில் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் நேர்மைமிகு அரசியல்வாதிகள், தங்கள் நாட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்தனர். அவர்கள் மூலம் கிடைத்த அனுகூலத்தை, நேர்மையற்றவர்கள் ஆட்சிக்கு வந்தமையால், நாட்டில் பிரச்சினைகள் வானை முட்டிவிட்டன.

வியாபாரத்தில் மோசடி, கல்வியை வியாபாரமாக்குதல், மருத்துவத்தில் சுரண்டல், போதையை நாடுதல், நாகரிகத்தின் பேரால் நடக்கும் சீர்கேடுகள், எல்லாமே ஒழுக்கம் சார்ந்தனவற்றுக்கு எதிரான இழி செயல்களில் சில உதாரணங்கள் ஆகும்.

ஆனால், இந்தச் செயல்களுக்குக் காரணமானவர்கள், தங்களை ஒழுக்கம் மிகு மாந்தர்களாகவே காட்டுவதும் உண்டு. இவர்களின் வருமானங்களைப் பார்த்து, சாதாரணமான மக்களும் மனப்புரள்வில் சிக்குவதுண்டு. நிலையான நல்வாழ்வில் தோல்வியில்லை, அமைதி மட்டுமே உண்டு என்பதை உணர்க...

நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம். ஐயூப்

# தேர்தல் நாட்கள் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டும்

கடந்த ஒக்டோபர் மதம் 21ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளகரங்கில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் விசேட மாநாட்டின்போது உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் என்றும் 2025ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் என்றும் கூறியிருந்தார்.

இந்தக் கூற்றில் இரண்டு முக்கிய விடயங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது, இது அவர் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக முன்னர் தெரிவித்த கருத்துக்களோடு முரண்படுவதாகும். இரண்டாவது சட்டத்தின் பிரகாரம் தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பதை ஜனாதிபதியால் தீர்மானிக்கப்பட முடியுமா என்பதாகும்.

கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக ஜனாதிபதி கடந்த வருடம் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது கூறினார். அவ்வாறாயின் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்கி மாகாண சபைத் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுங்கள் என்று தமிழ் கட்சிகள் அப்போது கூறின. ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டார்.

ஆனால், பின்னர் அவர் ஜனவரி மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தைப் பொங்கல் விழாவில் உரையாற்றும் போது இரண்டு வருடங்களில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குவதாக கூறினார். அதன் மூலமும் அடுத்த வருடம் முடிவடைவதற்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் என்றே அவர் கூறினார். இப்போது அத்தேர்தல்கள் 2025ஆம் ஆண்டு நடைபெறும் என்கிறார். இது ஏமாற்றுச் செயல் அல்லவா?

தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பதை ஜனாதிபதியா நிர்ணயிக்க வேண்டும்? இல்லை அந்த அதிகாரம் சட்டத்தால் அவருக்கு வழங்கப்படவில்லை. அரசியலமைப்பின் படியும் தேர்தல்கள் தொடர்பான ஏனைய சட்டங்களின் பிரகாரமும் தேர்தல்கள் ஆணைக்குழுவே அதனைத் தீர்மானிக்க வேண்டும். உதாரணமாக, ஒருவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஐந்து வருடங்கள் பூர்த்தியாகும் நாளுக்கு முன்னரான ஒரு மாதத்துக்கும் இரண்டு மாதங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும் என்று அரசியலமைப்பு கூறுகிறது. அந்த வழிகாட்டலின் பிரகாரம் ஆணைக்குழு அந்த இடைப்பட்ட காலத்தில் ஒரு நாளை ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியாக தீர்மானிக்கிறது.

இதேபோல், பாராளுமன்ற தேர்தலுக்கான நாளையும் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் நாளையும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நாளையும் தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை ஜனாதிபதி கூறியதை ஏற்றுக் கொள்ளலாம். அத்தேர்தல் சட்டப்படி அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதிக்கும் ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு நாளில்தான் நடைபெற வேண்டும். ஏனெனில் கோட்டாபய ராஜபக்ஷ 2019ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதிதான் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றார்.

ஆயினும் சட்டப்படி பொதுத் தேர்தல் அடுத்த வருடம் நடைபெற முடியாது. அது 2025ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அல்லது ஜூலை மாதத்தில் நடைபெற வேண்டும். பாராளுமன்றம் முதன் முறையாகக் கூடிய நாள் முதல் நாலரை ஆண்டுகளுக்குப் பின்னர் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும். அவ்வாறு கலைத்தாலும் அக்கலைப்பு 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலேயே நடைபெற வேண்டும். அதன் படியும் அடுத்த பொதுத் தேர்தல் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் ஒரு நாளில் தான் நடைபெற வேண்டும்.

எனினும், அரசியலமைப்பை மாற்றி பொதுத் தேர்தலை அதற்கு முன்னர் நடத்தலாம். ஆனால் அரசியலமைப்பைத் திருத்துவதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அதனை ஆதரிக்க வேண்டும். தமது பதவிக் காலத்தைக் குறைக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பார்களா? அடிமை மனப்பான்மை காரணமாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள் என்று வைத்துக் கொண்டாலும் இப்போது அக்கட்சியிடம் மூன்றில் இரண்டு வாக்குப் பலம் இருக்கிறதா?

ஒரு ஜனாதிபதி தமது பதவிக் காலத்தை நான்காண்டுகளாகக் குறைத்துக் கொண்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தலை ஏன் நடத்த வேண்டும்? அதேபோல் ஒரு ஜனாதிபதி ஐந்தாண்டுகளான பாராளுமன்ற பதவிக் காலத்தை நாலரை ஆண்டுகளாகக் குறைத்து அடுத்த பொதுத் தேர்தலை ஏன் உரிய காலத்துக்கு முன்னரே நடத்த வேண்டும்? நாட்டின் நலனுக்காகவன்றி தமது அல்லது தமது கட்சியின் நலனுக்காகவே அவர் அவ்வாறு செய்கிறார்.

அது நாகரிகமான செயலாகவோ நியாயமான செயலாகவோ அமையாது. ஆனால் அந்த நாகரிகமற்ற செயலுக்கு அரசியலமைப்பு வேண்டுமென்றே வழிவகுத்துள்ளது. நாகரிகம் என்பது இலங்கை அரசியலில் இல்லாத ஒரு காரணி என்பதால் அந்தக் கேள்வியை எழுப்புவதில் பயனும் இல்லை. நான்காண்டுகளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் வகையில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவே சட்டத்தை மாற்றினார். 1980ஆம் ஆண்டு தமது பிரதான போட்டியாளரான சிறிமா பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமைகளை ஏழாண்டுகளுக்கு இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்த ஜயவர்தன சிறிமா இல்லாத நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக இந்த சட்டப் பிரமாணத்தை 1982ஆம் ஆண்டு மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் நிறைவேற்றிக் கொண்டார்.

> **கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினையை தீர்ப்பதாக ஜனாதிபதி கடந்த வருடம் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது கூறினார்**

அதனை அப்போது நாகரிகமற்றச் செயல் என்று விமர்சித்த சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் பின்னர் தமது சொந்தத் தேவைக்காக முறையே 1999ஆம் ஆண்டிலும் 2010ஆம் ஆண்டிலும் அச்சட்டப் பிரமாணத்தைப் பாவித்து உரிய காலத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினர். 2015ஆம் ஆண்டிலும் அவ்வாறே செய்ய முற்பட்ட போதே மஹிந்த தோல்வியடைந்தார்.

இச்சட்டப் பிரமாணம் எந்தளவு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்றால் ஜனாதிபதிகள் சோதிடர்களின் கருத்துப்படியே தேர்தல் திகதியை நிர்ணயிக்கின்றனர். அதாவது இந்த விடயத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரம் சோதிடர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தினத்தை சுமணதாச என்ற சோதிடரே தீர்மானித்ததாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல்கள் மற்றும் பொதுத் தேர்தல்கள் மற்றுமன்றி சகல தேர்தல்களுக்குமான நாட்கள் ஜனாதிபதியாலும் பதவியில் இருக்கும் அரசாங்கத்தாலுமே நிர்ணயிக்கப்படுகின்றன. அதற்காக ஜனாதிபதிகள் தமது பிரதிநிதியான மாகாண ஆளுநர்களையும் தமது அமைச்சர்களையும் பாவிக்கின்றனர்.

மாகாண ஆளுநர்களால் மட்டுமே மாகாண சபைகள் கலைக்கப்பட முடியும். 1993ஆம் ஆண்டு ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவின் ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களினதும் ஆளுநர்கள் தத்தமது மாகாண சபைகளை ஒரே நாளில் கலைத்தனர். ஏழு ஆளுநர்களுக்கும் ஒரே நாளில் எவ்வாறு இந்த எண்ணம் வந்தது?

இவ்வாறே உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளூராட்சி அமைச்சர் மூலம் அரசாங்கம் கலைக்கிறது, அல்லது அவற்றுக்கான தேர்தல்களை ஒத்திவைக்கிறது. கடந்த வருடம் பெப்ரவரி மாதம் பொருளாதார நெருக்கடியின் காரணமாகச் சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் பதவிக் காலம் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. இந்த வருடம் மார்ச் மாதம் 9ஆம் திகதி அவற்றுக்கான தேர்தல்கள் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்த நிலையில், தேர்தல்களுக்கான நிதியினை வழங்க அரசாங்கம் மறுத்ததால் அவற்றைக் காலவரையறையின்றி ஒத்திவைக்க ஆணைக்குழு நிர்ப்பந்திக்கப்பட்டது.

சட்டச் சிக்கல் ஒன்றின் காரணமாகத் தேர்தல்கள் ஆணைக்குழு 2017ஆம் ஆண்டு முதல் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாமல் இருக்கிறது. நாட்டில் தமக்குச் சாதகமான நிலைமை இல்லை என்பதால் அரசாங்கம் அச்சட்டச் சிக்கலுக்குத் தீர்வை தேடித் தேர்தல்களை நடத்த மறுக்கிறது. இதனால் சட்டச் சிக்கல் ஏற்படு முன் இருந்த விகிதாசார முறையில் அத்தேர்தல்களை நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனி நபர் சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பித்தார். உயர் நீதிமன்றம் அதனை பொதுவாக அங்கீகரித்த போதிலும் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை.

சட்டப்படி தேர்தல்கள் நடத்தப்படாமல் ஜனாதிபதியின் விருப்பத்துக்கு ஏற்ப தேர்தல் திகதிகள் நிர்ணயிக்கப்படுவது ஏனைய கட்சிகளுக்கு இழைக்கப்படும் அநீதி மட்டுமல்ல, நாட்டில் பல்வேறு அரசியல் குழப்பங்களையும் ஏற்படுத்துகிறது. எனவே அமெரிக்கா போன்ற நாடுகளில் இருப்பதைப் போல் சகல தேர்தல்களுக்குமான நாட்கள் ஜனாதிபதிகளால் இலகுவாக மாற்ற முடியாத வகையில் அரசியலமைப்பின் மூலம் நிர்ணயிப்பதே பொருத்தமானதாகும்.

## கடிதங்கள்

### கூரை இல்லாத பஸ் தரிப்பிடம்

மொனராகலை-வெல்லவாய வீதியில் நீர்ப்பாசன அலுவலகத்துக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பஸ் தரிப்பிடத்தில், நிழற்குடையானது மேற்கூரையின்றி, வானத்தைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றது.

இன்றைக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்பே அதன் மேற்கூரை காற்றில் அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளது.


தற்போது அப்பகுதியில் பெய்து வரும் மழையால் பேருந்து தரிப்பிடத்தில், பஸ்ஸுக்காக காத்திருக்கும் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குடைகளை விரித்துப் பிடித்துக்கொண்டே பஸ் வரும் வரையிலும் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடைகளை விரித்தால், இரண்டொருவருக்கு மேல் அங்கு நிற்கமுடியாது என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மொனராகலை உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளும் இணைந்து பயணிகள் பஸ் தரிப்பிடத்தின் கூரையை விரைவில் புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

– சுமணசிறி குணதிலக்க





# சவால் விடும் நுளம்பு



இரத்தினம் நடராஜன் ஹரன்

இலங்கைவாழ் அனைத்து குடி மக்களையும் நல்ல சூழலில் தேகாரோக்கியம் மிக்க பிரஜைகளாக கொண்டுவரும் நோக்கில் சுகாதாரத்துறை பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. எனினும், டெங்கு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதற்கு பிரதான காரணமாக, தங்களுடைய சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்காமையே ஆகும்.

இதில் டெங்குநோய்க்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதும், டெங்குநோய் இனவிருத்தி செய்யக்கூடிய இடங்களை முற்றாக அழித்துவிடுவதும் இந்த ஆட்கொல்லி நோய் பற்றிய பாதிப்புக்களை மக்களுக்கு வலுவூட்டலுமாக பல்வேறுபட்ட சேவைகளைச் செய்து வருகின்றது.

டெங்கு நுளம்புகள் உட்பட அனைத்து வகையான நுளம்புகளின் பெருக்கத்துக்கு பொதுவாகத் தேங்கி நிற்கும் சிறிய நீரில்தான் பல்கிப் பெருகும் இயல்புகளை டெங்கு நுளம்புகள் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் எமது நாட்டில் நுளம்புகள் பல்கிப் பெருகுவதற்குத் தேவையான சூழலும் வாய்ப்புக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்பது நிதர்சனமான விடயமாகும். இதற்கு நாகரீக வளர்ச்சியும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

நீர் தேங்கி நிற்கும் வகையில் கைவிடப்பட்ட டயர்கள், பொலித்தீன் பாவனை, பிளாஸ்ரிக் பொருட்கள், சிரட்டைகள், தகர டின்கள், கூரை பீலிகள், இளநீர் குரும்பைகள், பூச்சாடிகள் உள்ளிட்ட பல பொருட்கள் அமைந்துள்ளதாகச் சுகாதாரப் பிரிவு கூறுகின்றது. தற்காலத்தில் இந்த டெங்கு நுளம்புகள் செடி கொடிகளிலும் இன விருத்தி செய்வதுடன், நல்ல நீர் நிலைகளான குடிநீர் கிணறுகளிலும் தமது வாழ்விடத்தினை மாற்றி அமைத்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவு கூறுகின்றது.

தற்காலத்தில் நோய்த் தொற்றுக்களால் மனிதக் குலம் மடிவது கவலைக்குரிய விடயமே ஆகும். இதேநேரம் நுளம்புகளால் ஏற்படக் கூடிய மரணங்கள் அதிகரித்து வருவது உலக சுகாதார நிறுவனத்திற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. நுளம்புகளை ஒழிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நோய்த் தொற்றுக்குள்ளானவர்களை சுகதேகியாக மாற்றுவதற்கும் பெருமளவு நிதி செலவு செய்யப்பட்டு வருகின்றது.

பல்கிப் பெருகும் நுளம்புகள் பல வகைகளில் உள்ளன. அவற்றில் ஈடிஸ் எஜிப்டை, ஈடிஸ் அல்போபிக்டஸ், அனோபிளஸ், கியுலெக்ஸ் போன்ற சில வகை நுளம்புகள் தான் மனித ஆரோக்கியத்திற்கு ஆபத்தானதாக உள்ளன.

டெங்கு, சிக்கன்குன்யா, மலேரியா, ஜப்பானிய என்ஸபலைடிஸ், மூளைக்காய்ச்சல், யானைக்காச்சல் உள்ளிட்ட நோய்கள் உண்டாகின்றன.

இவற்றில் டெங்கு நோய்தான் இந்த நாட்டில் பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக மாறி உள்ளது. எமது நாட்டிலிருந்து மலேரியா நோய் முழு அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் டெங்கு தொற்று மருத்துவத்துறைக்குச் சவால்விடும் ஒரு தொற்று நோயாக உருவெடுத்து வருகின்றது

டெங்கு என்பது ஈடிஸ் நுளம்பு வகையால் பரவும் ஒரு வைரஸ் தொற்று நோயாகும் இத் தொற்றுக்குள்ளானவர்கள் எவ்வித நோய் அறிகுறிகளையும் வெளிப்படுத்த மாட்டார்கள். ஒரு சிலருக்குக் காய்ச்சல் ஏற்படுவதுடன், அவை வேறுபடுத்தப்படாத காய்ச்சல், டெங்கு குருதிப் போக்கு காய்ச்சல், சாதாரண டெங்குகாய்ச்சல் எனப் பல நிலைகளாகக் காணப்படும்.

**“டெங்குநோய்க்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதும் டெங்குநோய் இனவிருத்தி செய்யுக் கூடிய இடங்களை முற்றாக அழித்துவிடுவதும் இந்த ஆட்கொல்லி நோய் பற்றிய பாதிப்புக்களை மக்களுக்கு வலுவூட்டலுமாக பல்வேறுபட்ட சேவைகளை செய்து வருகின்றது**


ஈடீஸ் பெண் நுளம்பு மூலம் டெங்கு பரவுகின்றது ஈடிஸ் நுளம்பானது தொற்று ஏற்பட்ட மனிதர்களிடம் இருந்து குருதியை உட்கொள்வதன் மூலம் வைரஸினை பெற்றுவருகின்றது பொதுவாக டெங்கு நகரப்புறங்களிலேயே உருவாகின்றது.

டெங்கானது உயிராபத்து அச்சுறுத்தல் மிக்க ஒரு நோய். ஆதலால் அதனை ஆரம்பத்தில் இனம்கண்டால் முழுமையாகக் குணப்படுத்தி விடலாம். இது முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய நோயாகும்.

பொதுவாக ஒருவர் டெங்கு நோய்க்கு உள்ளானால் பின்வரும் குணாம்சங்களை அவதானிக்கக்கூடியதாக இருக்கும்

இரண்டு மூன்று நாட்களுக்கு கடும் காய்ச்சல், தலைவலி, தசைநார் வலி, மூட்டுவலி குமட்டல், வாந்திபேதி போன்றவாறான அறிகுறிகளைக் குறிப்பாக அவதானிக்கலாம். இருப்பினும் அதனை குருதிப்பரிசோதனை மூலமே உறுதிப்படுத்த முடியும்.

இதன் தாக்கத்தினால் குருதிச் சிறுதட்டு குறைவடைந்து காணப்படும் இதுவே இதன் பிரதான பண்பு இந்நோயினை ஆரம்பத்தில் கண்டறியத் தவறினால் மரணம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். எனவே, இன்றைய மழையுடன் கூடிய காலநிலையில் நாம் வீட்டுச் சுற்றாடல்களைத் தினமும் சுத்தமாகப் பேணி நாட்டின் சுகாதாரத்திற்கும் மனித இன நல்வாழ்விற்கும் பங்காளியாக மாறுவோம்.



பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின்

# “குறிஞ்சிச்சாரல் விழா 2023”

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் தமிழ்ச்சங்கம் “எட்டுத்திக்கும் எங்கள் கலை” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த குறிஞ்சிச்சாரல் விழாவானது கண்டி இந்து கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) மாலை சிறப்பாக இடம்பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும், தமிழ்ச்சங்க பெரும்தலைவருமான பேராசிரியர். எஸ். பிரசாந்தன், 97ஆவது செயற்குழு தலைவர் மு.வினோ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆர்.மகேஸ்வரன் கலந்து சிறப்பித்ததுடன், சிறப்பு அதிதிகளாக முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவரும் தமிழ்ச்சங்க முன்னாள் பெரும் பொருளாளருமான பேராசிரியர். வை. நந்தகுமார், முன்னாள் தமிழ்த்துறை தலைவரும், தமிழ்ச்சங்க முன்னாள் பெருந்தலைவருமாகிய பேராசிரியர் துரை.மனோகரன் மற்றும் முன்னாள் முதுநிலை விரிவுரையாளரும் தமிழ்ச்சங்க முன்னாள் பொருளாளருமான வ.தர்மதாசன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் உட்பட கண்டியின் முக்கிய பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர்.

இதன்போது கீர்த்தனாஞ்சலி, சங்க கால ஐவகை நிலங்களின் குணாம்சங்களை வெளிப்படுத்தி சங்க நிலச்சங்கம நடனம், இசைச்சாரல், மண் வாசனை நடனம், சொற்போர், நாடகம் என பல்வேறு முத்தமிழ் நிகழ்ச்சிகள் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் அரங்கேற்றப்பட்டதுடன், கண்டி திரித்துவக் கல்லூரி மாணவர்களின் சத்தியவான் சாவித்திரியின் கதையினை மையப்படுத்திய வில்லுப்பாட்டும், மோப்ரே கல்லூரியின் இசைக்கானமும், விஹாரமகாதேவி கல்லூரியின் அம்மன் நடனமும், இந்து மாமன்றம் கண்டி அறக்கட்டளை மாணவர்களின் வீணைக்கச்சேரியும், கண்டி, கலசமர்ப்பணா ந்ருத்யக்ஷேத்ரா மாணவியின் சிவதாண்டவம் என பல்வேறு கலை நிகழ்வுகள் மேடையை அலங்கரித்தது.

இந்நிகழ்வின் சிறப்பு விருதான சங்கச்சான்றோர் விருது இம்முறை மலையக மூத்த எழுத்தாளர் முருகன் சிவலிங்கத்திற்கு வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், இவர் இதுவரையில் 12 நூல்கள், 95 சிறுகதைகள், இரண்டு தமிழ் நாவல்கள், மற்றும் ஒரு ஆங்கில நாவலையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சிச் சாரல் நிகழ்வு இதுவரையில் யாழ்ப்பாணம், திருகோணமலை, ஹட்டன், கொழும்பு, கண்டி என பல்வேறு இடங்களில் இடம்பெற்றுள்ளதுடன், 2017 ற்கு பிறகு கடந்து சில ஆண்டுகளாக பல்வேறு காரணங்களால் தடைப்பட்டு நின்ற குறிஞ்சிச்சாரல் நிகழ்வானது இம்முறை கண்டி மாநகரில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சண்முகம் தவசீலன்


























இத்தாலி



# 28 ஆயிரம் பவுண்டு வேண்டுமா?

இத்தாலியின் “கால்விரல்” என்று அடிக்கடி வர்ணிக்கப்படும் கலாப்ரியா என்ற கிராமம் கடலோர அழகு மற்றும் மலை நிலப்பரப்புகளுக்குப் பெயர் பெற்றது. கலாப்ரியா கிராமம் சில ஆண்டுகளாக மக்கள்தொகை வீழ்ச்சியுடன் போராடி வருகிறது. இது உள்ளூர் மக்களிடையே கவலையை ஏற்படுத்தியது. இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண கலாப்ரியா நிர்வாகம் ஒரு புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதில், இத்தாலியில் நகரத்தில் இருந்து கிராமத்தில் வசிக்க வருவோருக்கு 28 ஆயிரம் பவுண்டு வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

40 வயதுக்குள் இருக்க வேண்டும், கைவிடப்பட்ட கடைகள், சிறுதொழில்களை நடத்தவோ அல்லது புதிதாகத் தொடங்கவோ முன் வர வேண்டும். 90 நாட்களுக்குள் குடியேற வேண்டும் என பல்வேறு நிபந்தனைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. கிராமப்பொருளாதாரம் சரிந்து வருவதைச் சமாளிக்க கலாப்ரியா நிர்வாகம் இது போன்ற ஒரு அறிவிப்பை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சீனா

# பாதுகாப்பு பேரவை தலைமையை ஏற்ற சீனா

உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டது, ஐ.நா. சபையின் 6 அங்கங்களில் ஒன்றான யு.என்.எஸ்.சி. (UNSC) எனப்படும் பாதுகாப்பு பேரவை இதன் மொத்த உறுப்பினர் நாடுகளின் எண்ணிக்கை 15. இதில் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்கள்.

பாதுகாப்பு பேரவையின் தலைமை பதவி, அதன் உறுப்பு நாடுகளால் சுழற்சி முறையில் மாதம் ஒரு நாட்டிற்கு வழங்கப்படும். இதற்கிடையே, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிக்கப் போவதாக உறுதி எடுத்து பலஸ்தீனத்தின் காசா பகுதியில் போர் புரிந்து வரும் இஸ்ரேல், உலக நாடுகளின் போர் நிறுத்த கோரிக்கையைப் புறக்கணித்து, தாக்குதலை மேலும் கடுமையாக்கியுள்ளது.

இந்நிலையில், கடந்த வாரம், ஐ.நா. பாதுகாப்பு பேரவையின் தலைமை பதவியைச் சீனா ஏற்றுக் கொண்டது. தற்போது தீவிரமடைந்துள்ள இஸ்ரேல்-ஹமாஸ் போர் பின்னணியில் உலகளாவிய அமைதிக்கு சீனாவின் தலைமை பதவி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அமெரிக்கா



# இஸ்ரேல் பிரதமருடன் ஜோபைடன் அவசர ஆலோசனை

இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பு இடையே போர் தொடங்கி 32 நாட்கள் ஆகிவிட்டது. ஆனாலும், இன்னும் போர் முடிவுக்கு வரவில்லை.

காசாவில் உள்ள மருத்துவமனைகள், அகதிகள் முகாம்கள், தேவாலயங்கள், பொதுமக்கள் வாழ்விடங்கள் உள்ளிட்ட பல இடங்களில் இஸ்ரேல் சரமாரியாக குண்டுகளை வீசி வருகிறது.

இந்த அதிரடி தாக்குதலில் கட்டிடங்கள் இடிந்து விழுவதோடு மட்டுமல்லாது பொது மக்களும் உயிரிழந்து வருகின்றனர்.

இஸ்ரேல் தாக்குதலால் காசா நகரமே உருக்குலைந்து விட்டது.


இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவசர ஆலோசனை நடத்தியதாக அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

கேரளா

# பிரியாணிக்குள் தலை

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் ஏலூர் பகுதியைச் சேர்ந்த ஒருவர் முத்தூரில் உள்ள பரோட்டா கடையில் 4 பிரியாணி பொதிகள் வாங்கியுள்ளார்.

அவற்றை குடும்பத்துடன் உட்கொள்வதற்கு வீட்டுக்கு எடுத்து வந்திருக்கிறார். வீட்டில் வைத்து பிரியாணி பொதிகளைப் பிரித்தபோது, அதில் ஒரு பொதி பிரியாணிக்குள் கோழியின் முழு தலை இருந்துள்ளது. அதனைப்பார்த்து அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.



இந்நிலையில், பிரியாணிக்குள் கோழி தலை கிடந்தது குறித்து திரூர் நகராட்சியின் உணவு பாதுகாப்பு அதிகாரிகளிடம் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் சம்பந்தப்பட்ட உணவகத்தில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்திய பின்பு உணவகத்துக்குச் சீல் வைத்து மூடியுள்ளனர்.

சத்தீஸ்கர்

# 23 ஆண்டுகளுக்கு பிறகு வாக்களிக்கும் மக்கள்



சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு 2 கட்டங்களாகத் தேர்தல் நடைபெற்று வருகிறது.

இந்த தொகுதியில், காங்கிரஸ் சார்பில் சவிந்திர கர்மாவும், பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) சார்பில் சைத்திரன் அதானியும் களத்தில் உள்ளனர். இதற்கு முன்பு இத்தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த காங்கிரஸின் மகிந்தர கர்மா மற்றும் பா.ஜ.கவின் பீமா மண்டவி ஆகிய இருவரும் நக்சலைட்டுகளின் தாக்குதலில் உயிரிழந்திருந்தனர்.

இத்தகைய பரபரப்பான சூழலில் 23 ஆண்டுகளுக்குப் பிறகு இத்தொகுதியில் உள்ள கரிகுண்டம் கிராம மக்கள் பலத்த பாதுகாப்புடன் வாக்களித்து வருகின்றனர். பழங்குடியினத்தை சேர்ந்த சுமார் 600 பேர் மட்டுமே வசிக்கும் இந்த கிராமத்தில், பல ஆண்டுகளாக நக்சலைட்டுகளின் பாதிப்பால் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படாததால் அவர்கள் வாக்களிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ராமநாதபுரம்

# 10 ரூபாய் குற்றி விவகாரம்: 3 ஆண்டுகள் சிறை



இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 10 ரூபாய் நாணயத்தை வாங்கவில்லை என்றால் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு சந்திரன் எச்சரித்துள்ளார்.

மேலும் அவர், 10 ரூபாய் நாணயங்களை யாரேனும் வாங்க மறுத்தாலோ, செல்லாது என்றாலோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அதாவது, இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட 10 ரூபாய் நாணயங்களை வாங்க மறுப்பவர்கள் மீது புகார் அளித்தால், இந்தியத் தண்டனைச் சட்டம் 124 பிரிவு ஏ-வின் படி குற்றம். எனவே, இந்த குற்றத்திற்கு மூன்று வருட சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும் என்றார்.

உலகக் கிண்ணம்:

# இலங்கை அவுட்

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து இலங்கை வெளியேற்றப்பட்டுள்ளது.

புதுடெல்லியில் திங்கட்கிழமை (06) நடைபெற்ற பங்களாதேஷுடனான போட்டியில் தோற்றதைத் தொடர்ந்தே தொடரிலிருந்து இலங்கை வெளியேற்றப்பட்டுள்ளது.

இதுவரையில் எட்டுப் போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை, இரண்டு போட்டிகளில் மாத்திரமே வென்று நான்கு புள்ளிகளையே பெற்றுள்ள நிலையில், எஞ்சியிருக்கும் போட்டியில் வென்றால் கூட அதிகபட்சமாக ஆறு புள்ளிகளையே அடைய முடியும் என்ற நிலையில், புள்ளிகள் பட்டியலில் நான்காமிடத்திலுள்ள நியூசிலாந்து எட்டுப் புள்ளிகளுடனுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

இலங்கை: 279/10 (49.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: சரித் அஸலங்க 108 (105), பதும் நிஸங்க 41 (36), சதீர சமரவிக்கிரம 41 (42), தனஞ்சய டி சில்வா 34 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 2/51, ஷகிப் அல் ஹஸன் 2/57, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/49)

பங்களாதேஷ்: 282/7 (41.1 ஓவ.) (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 90 (101), ஷகிப் அல் ஹஸன் 82 (65) ஓட்டங்கள். பந்துவீச்சு: டில்ஷான் மதுஷங்க 3/69, அஞ்சலோ மத்தியூஸ் 2/35, மகேஷ் தீக்‌ஷன 2/44)

போட்டியின் நாயகன்: ஷகிப் அல் ஹஸன்

இந்நிலையில், பூனேயில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்கள் இங்கிலாந்தை நெதர்லாந்து எதிர்கொள்ளவுள்ளது.



பங்களாதேஷ் டெஸ்ட் தொடருக்கான

# நியூசிலாந்துக் குழாமில் றவீந்திர, சான்ட்னெர்



“ 2021ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னரும் டெஸ்ட் குழாமில் இடம்பெற்றுள்ளனர்

பங்களாதேஷுக்கான டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்துக் குழாமில் றஷின் றவீந்திர, கிளென் பிலிப்ஸ், மிற்செல் சான்ட்னெர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

றவீந்திர கடந்தாண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னரும், பிலிப்ஸ் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னரும், சான்ட்னெர் 2021ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னரும் டெஸ்ட் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, வேகப்பந்துவீச்சாளர்களாக அணித்தலைவர் டிம் செளதியோடு மற் ஹென்றி, கைல் ஜேமிஸன் ஆகியோரே இடம்பெற்றுள்ள நிலையில், நீல் வக்னர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: டிம் செளதி (அணித்தலைவர்), டொம் பிளன்டெல், டெவோன் கொன்வே, மற் ஹென்றி, கைல் ஜேமிஸன், டொம் லேதம், டரைல் மிற்செல், ஹென்றி நிக்கொல்ஸ், அஜாஸ் பட்டேல், கிளென் பிலிப்ஸ், றஷின் றவீந்திர, மிற்செல் சான்ட்னெர், இஷ் சோதி, கேன் வில்லியம்ஸன், வில் யங்க்.



தம்பட்டை லெவிண் ஸ்டார் வி.க தொடர்:

# சம்பியனானது அக்கரைப்பற்று

■ அஸ்ஹர் இப்றாஹீம்

தம்பட்டை லெவிண் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் தொடரில் அக்கரைப்பற்று சம்பியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

48 கழகங்கள் உள்ளடக்கிய இத்தொடரின் இறுதிப் போட்டியில் விநாயபுரம், விநாயகர் விளையாட்டுக் கழக அணியினரை வீழ்த்தியே சம்பியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சம்பியனான சம்பியன் விளையாட்டுக் கழகமானது சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டதுடன், 40,000 ரூபாய் பணப்பரிசையும் பெற்றுக் கொண்டனர்.

இறுதிப் போட்டியில் நாயகனாக சம்பியன் விளையாட்டுக் கழக வீரர் அலெக்ஸ் சுஜீ தெரிவானார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# டொட்டென்ஹாமை வீழ்த்திய செல்சி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது.

செல்சி சார்பாக நிக்கொலஸ் ஜக்சன் ஹட்-ட்ரிக் கோல்களைப் பெற்றதோடு, கோல் பல்மர் ஒரு கோலைப் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 08 நவம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.